செ.வெ.எண்-31 நாள்-18.09.2020

# அரியலூர் மாவட்டம்

# பாலியல் குற்றங்கள் தொடர்பாக 1098 என்ற தொலைபேசி வாயிலாக புகார் தெரிவிக்கலாம் - மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.த.ரத்னா, இஆப., அவர்கள் தகவல்.

அரியலூர் மாவட்ட ஆட்சியரகத்தில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகின் வாயிலாக பாலியல் விழிப்புணர்வு எச்சரிக்கை சுவரொட்டியினை மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் இன்று (18.09.2020) வெளியிட்டார்கள்.

**இந்நிகழ்ச்சியில் மாவட்ட ஆட்சியர் அவர்கள் தெரிவித்ததவாது,**

பதினெட்டு வயதிற்கு கீழ் உள்ள சிறுவன் மற்றும் சிறிமியர்களை பாலியல் வன்கொடுமையிலிருந்து பாதுகாத்திடும் வகையில் மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலகு மூலம் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அதன்படி, பாலியல் குற்றங்கள் தொடர்பான புகார்களுக்கு 1098 என்ற இலவச தொலைபேசி மூலம் புகார் தெரிவிப்பதற்கும், காவல்துறையின் மூலம் உதவி தேவைப்படுபவர்களுக்கு 100 என்ற எண்ணை தொடர்பு கொண்டு தங்கள் புகார்களை தெரிவிக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

மேலும், 18 வயதிற்கு கீழே உள்ள சிறுவன் அல்லது சிறுமியிடம் பள்ளிகளிலோ, வெளி வட்டாரங்களிலோ ஏற்படும் உளவியல் மற்றும் உடல் ரீதியான பாலியல் தொல்லைகள் மிகவும் கண்டிக்கத்தக்க குற்றமாகும், குற்றம் புரிபவர்கள் மீது அவர்களுக்கு நீதிமன்றத்தின் மூலம் சிறை தண்டனை முதல் மரண தண்டனை கூட விதிக்கப்படலாம். பொதுமக்கள் மற்றும் சிறார்கள் தங்களது பகுதிகளிலோ அல்லது தங்களுக்கோ ஏதேனும் பாலியல் தொடர்பான குற்றங்கள் நடைபெறும்பொழுது மேற்காணும் எண்ணை தொடர்பு கொண்டு புகார் தெரிவிக்க வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் **திருமதி.த.ரத்னா, இஆப.,** அவர்கள் தெரிவித்தார்கள்.

பின்னர், பாலியல் குற்றங்கள் தொடர்பான விழிப்புணர்வு பொதுமக்களிடையே ஏற்படுத்தும் வகையில் விழிப்புணர்வு துண்டு பிரசுரங்களை மாவட்ட ஆட்சியர் அவர்கள் வெளியிட்டு, மாவட்ட ஆட்சியர் அலுவலக முகப்பில் விழிப்புணர்வு சுவரொட்டிகளை ஒட்டினார்கள்.

இந்நிகழ்ச்சியில் மாவட்ட வருவாய் அலுவலர் இரா.ஜெய்னுலாப்தீன், மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) ரவிசந்திரன், அவர்கள், மாவட்ட குழந்தைகள் பாதுகாப்பு அலுவலர் து.வசந்த குமார் மற்றும் ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்ட அலுவலர் சாவித்திரி மற்றும் அலுவலர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

**செய்தி வெளியீடு:- செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், அரியலூர்.**